ஜாக்சன்வில் தமிழ் பள்ளியின் பருவ இதழ்

# மயிலிறகு

வாழ்க தமிழ்! வளர்க தமிழினம்!

மயில் 4 இறகு 3, 01-18-2023

## புத்தாண்டு மற்றும் பொங்கல் நல்வாழ்த்துக்கள்



# பதிப்பாசிரியர் குழுவிடமிருந்து

**அனைவருக்கும் வணக்கம்!**

## புத்தாண்டு மற்றும் பொங்கல் நல்வாழ்த்துக்கள்

2023 ஆம் புத்தாண்டில் உங்கள் அனைவரையும் மீண்டும் சந்திப்பதில் மயிலிறகு பெரும் மகிழ்ச்சியடைகிறது.

மயிலிறகு பத்திரிக்கைகான பங்களிப்பும், வரவேற்பும் அதிகரித்து வருவது குழுவிற்கு பெரும் மகிழ்ச்சியையும், உற்சாகத்தையும் அளிக்கிறது. மேலும் இதில் மாணவர்களுடன், பெற்றோர்களும் உங்களுடைய படைப்புகளை மயிலிறகில் பதிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். திருக்குறள், சுவையான சுட்டிக் கதைகள், சிறுவர் பாடல், தாத்தா பாட்டிக்குக் கடிதம், தமிழ்க் குறுக்கெழுத்து விளையாட்டு, சிறுவர்களின் ஓவியங்கள், பழமொழி, மரபு விளையாட்டு, நா பிறழ் பயிற்சி, சொல் விளையாட்டு, எழுத்து விளையாட்டு, விடுகதை, தமிழின் தொன்மை சார்ந்த பல தகவல்களை உள்ளடக்கிய இந்த இதழ் உங்கள் அனைவருக்கும் பிடிக்கும் என நம்புகிறோம் . பதிப்பில் உள்ள சில தகவல்கள் மட்டுமே இணைய தளத்தில் எடுக்கப்பட்டவை, மற்ற அனைத்தும் முற்றிலும் சுயமாக உருவாக்கப்பட்டவை. அனைத்து தமிழ் சிறுவர்கள் மற்றும் பெற்றோர்களுக்கும் இவ்விதழ் பயனுள்ளதாக இருக்கும் என்று நம்புகின்றேன். எனவே இந்த இதழுக்கு சற்று நேரம் ஒதுக்கி, தாங்கள் தங்கள் குழந்தைகளுடன் படிக்கும் படி அன்பாக கேட்டுக் கொள்கிறோம்.

இதழை மேலும் சிறப்பிக்க உங்கள் உதவி மிகவும் அவசியம். உங்கள் கருத்துக்களையும், குறிப்புகளையும் மின்னஞ்சல் வழியாக தெரிவிக்கவும்.

மின்னஞ்சல் தொடர்பு:
KATHIRAVANP@YAHOO.COM, PRADEEKUTTY@YAHOO.CO.IN.

வெளியிட உதவி புரிந்த அனைவருக்கும் நன்றி!

# உள்ளே.....

- ATA 2022-23 போட்டிகளில் வெற்றி பெற்றவர்கள்
- சித்திரம் பேசுதடி
- கவிதைகள்
- கதை நேரம்
- வார்த்தை விளையாட்டு
- பாடி பழக
- செய்திகள்

https://jtmtamilschool.org/


# ATA 2022-23 போட்டிகளில் வெற்றி பெற்றவர்கள்

## வெற்றியாளர்கள் மற்றும் பங்கேற்பாளர்கள் அனைவருக்கும் வாழ்த்துக்கள்






# ATA 2022-23 போட்டிகளில் வெற்றி பெற்றவர்கள்






# சித்திரம் பேசுதடி..

## நிரிக்ஷ

### நிலை 1



# சித்திரம் பேசுதடி..

## அஸ்வத்நாராயண் வித்யாசாகர்

## நிலை 4





# கவிதைகள்



அப்பச்சி ஆத்தாக்கள்
அம்மான்கள் அத்தைகளை
எப்பொழுதும் கொண்டாடி
இனிமையுடன் வாழ்த்திடுவோம்

அண்ணன்தம்பி தங்கைகள்
அக்காவோடு அத்தான்கள்
கண்களென உறவுகளை
கனிவுடனே வாழ்த்திடுவோம்

பசித்தவர்க்குப் பரிமாறும்
பாசம்வர வாழ்த்திடுவோம்
கசிந்துமனம் பிறர்க்குதவும்
கருணைவர வாழ்த்திடுவோம்

# கவிதைகள்



வாழ்த்திடுவோம் நம்மைநாம்
வாழ்த்திடுவோம் உறவுகளை
வாழ்த்திடுவோம் மானுடத்தை
வாழ்த்திடுவோம் புத்தாண்டை

புத்தாண்டுப் பொங்கலினை
பூரிப்பாய் வரவேற்போம்
மெத்தநலம் சூழ்ந்துவர
மெய்சிலிர்க்க வரவேற்போம்.

–தொகுப்பு
வானதி

# கதை நேரம்

## திருக்குறள் கதைகள்

## நன்றி மறந்த சிங்கம்

ஒருநாள் ஒரு மரம் வெட்டுறவர் காட்டுக்குள்ள மரம் வெட்டிக்கிட்டு இருந்தாரு ,அப்ப யாரோ கத்துற மாதிரி சத்தம் கேட்டுச்சு



உடனே சத்தம் கேட்ட பக்கம் போய் பாத்தாரு அந்த விறகுவெட்டி.அங்க ஒரு சிங்கம் கூண்டுக்குள்ள அடைஞ்சு கிடைச்சது ,அத பாத்ததும் தெரிஞ்சது எதோ வேட்டைக்காரன் கூண்டு வச்சு அந்த சிங்கத்தை பிடிச்சிட்டான்னு

# நன்றி மறந்த சிங்கம்




விறகுவெட்டிய பாத்ததும் மனிதனே என்னை காப்பாத்துன்னு சொல்லி கத்துச்சு அந்த அந்த சிங்கம் ,இருந்தாலும் தயக்கமா இருந்த அந்த விறகுவெட்டி சிங்கமே நீ வேட்டையாடி சாப்புடுற மிருகம் உன்ன வெளிய விட்டா நீ என்ன கொன்னு தின்னுடுவான்னு சொன்னாரு

மனிதனே நானே கூண்டுக்குள்ள அடிபட்டு கிடைக்குறேன் என்னால உனக்கும் எந்த ஆபத்தும் வராது கூண்ட தொறந்து விடுன்னு கெஞ்சி கேட்டுக்கிடுச்சு





# நன்றி மறந்த சிங்கம்





சிங்கத்தோட பேச்ச கேட்டு மனசு இறங்குன அவரு கூண்ட தொறந்து விட்டாரு ,வெளிய வந்த சிங்கம் திடீர்ன்னு அந்த மனுசன பிடிக்க பாஞ்சது

பயந்துபோன விறகுவெட்டி நன்றி கெட்ட சிங்கமே இது என்ன உன்ன காப்பாத்துன என்னையே கொள்ள வரேன்னு கத்துனாருஅப்ப அந்த சிங்கம் சொல்லுச்சு என்னோட குணம் உனக்கு தெரியாத ,நான் ஒரு வேட்டை மிருகம்னு தெரிஞ்சும் என்ன விடுவிச்ச உனக்கு என்ன நடந்தாலும் அதுக்கு நான் பொறுப்பில்லன்னு சொல்லி அவரு மேல குதிக்க ஆரம்பிச்சது
சிங்கத்த நம்புனது ரொம்ப தப்புனு நினச்சு வருத்தப்பட்ட மனுஷன் அந்த சிங்கத்துக்கு உணவா ஆகுறது தனக்கு கிடைச்ச தண்டனைனு நினச்சுகிட்டு இருக்கும்போது அங்க ஒரு நரி வந்துச்சு.

# நன்றி மறந்த சிங்கம்



நரியாரே நரியாரே என்ன காப்பாத்துங்கன்னு சொல்லுச்சு ,நடந்தத தெரிஞ்சுக்கிட்ட நரி அந்த மனுசன காப்பாத்த நினைச்சது

அது எப்படி சிங்கத்த நீ காப்பாத்துனனு கேட்டுச்சு ,உடனே சிங்கம் சொல்லுச்சு நான் இந்த கூண்டுக்குள்ள இருந்தப்பனு கதைய செல்ல ஆரம்பிச்சது
இருங்க இருங்க சிங்கராஜாவே அது எப்படி நீங்க கூண்டுக்குள்ள மாட்டுனீங்க ,இந்த மனுஷன் எந்த பக்கம் இருந்து வந்தான் ,எப்படி இவனால கூண்ட தொறக்க முடிஞ்சதுன்னு கேள்வி கேட்டுகிட்டே இருந்துச்சு



# நன்றி மறந்த சிங்கம்

அப்ப சிங்கம் நடந்தத நடிச்சு காமிக்க ஆரம்பிச்சது,அப்ப சொல்லுச்சு நான் இந்த கூண்டுக்குள்ள இருந்தானான்னு சொல்லிகிட்டே கூண்டுக்குள்ள போச்சு சிங்கம் ,இதுதான் சமயம்னு டக்குனு கூண்ட மூடிடுச்சு நரி

இது என்ன தீர்ப்பு சொல்ல வந்த நீ இப்படி பண்ணலாம்ணு கேட்டது , வேட்டையாடுற உன்னோட குணத்த எப்படி உன்னால மாத்திக்க முடியாதோ ,அதுமாதிரி அடுத்தவங்களை ஏமாத்துற பழக்கத்த என்னால விட முடியாதுன்னு சொல்லி அந்த மனுசன காப்பாத்துச்சு அந்த நரி

அப்பத்தான் அந்த சிங்கத்துக்கு ஒரு குறள் ஞாபகத்துக்கு வந்துச்சு

எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு


தனக்கு நன்மை செய்ய வந்த மனுசன கொல்ல நினைச்சது தன்னோட நன்றி இல்லாத தனம் அதனால தனக்கு கிடைச்ச தண்டனை சரிதான்னு நினைச்சது

–தொகுப்பு
ஓவியா ரகுபதி





# விளையாடு வினையாக்கு!




கட்டங்களை நிரப்பி விடையை அனுப்பவும்





விளையாடு வினையாக்கு!

# விடுகதைகளுக்கு விடை என்ன?

1. ஓடுவான், வருவான்; ஒற்றைக் காலில் நிற்பான். அவன் யார்?

2. பச்சைப் பெட்டிக்குள் வெள்ளை முத்து. அது என்ன?

3. கூரை வீட்டைப் பிரித்தால் ஓட்டு வீடு. ஓட்டு வீட்டுக்குள்ளே வெள்ளை மாளிகை. வெள்ளை மாளிகையின் நடுவே ஒரு குளம். அது என்ன?

4. எதைக் கொடுத்தாலும் சாப்பிடுவேன். தண்ணீர் குடித்தால் இறந்துவிடுவேன். நான் யார்?

5. ஊர் முழுவதும் சுற்றுவேன். வீட்டுக்குள் நுழைய மாட்டேன். நான் யார்?

6. மஞ்சள் குருவி ஊஞ்சலாடுது. அது என்ன?

<u>விளையாடு வினையாக்கு!</u>

# மூளைக்கு வேலை..

1) ஒரு குடும்பத்தில் மகன்களும், மகள்களும் உள்ளனர். ஒவ்வொரு மகனுக்கும் ஒரே எண்ணிக்கையில் சகோதரர்களும் சகோதரிகளும் உள்ளனர். ஒவ்வொரு மகளுக்கும் சகோதரிகளைப் போன்று சகோதரர்கள் இரு மடங்கு உள்ளனர். அந்தக் குடும்பத்தில் எத்தனை மகன்கள், எத்தனை மகள்கள் இருக்கின்றனர்?

2) கடிகாரத்தில் உள்ள சிறிய முள்ளும் பெரிய முள்ளும் ஒருநாள் நள்ளிரவுக்கும் மறுநாள் நள்ளிரவுக்கும் இடையே எத்தனை முறை ஒன்றையொன்று கடந்து செல்கின்றன?

3) மாலாவுக்கு வயது 13. அவள் தந்தையின் வயது 40. எத்தனை ஆண்டுகளுக்குமுன் தந்தையின் வயது மாலாவின் வயதில் நான்கு மடங்காக இருந்தது?

**விடைகளை**
kathiravanp@yahoo.com
Pradeekutty@yahoo.co.in**என்ற**
**முகவரிக்கு மின்அஞ்சல் அனுப்பவும். சரியான விடை அளிப்பவருககு ஒரு ஆச்சரியம் காத்துக் கொண்டிருக்கிறது**

# பாடி பழக



**அம்மா இங்கே வா**

அம்மா இங்கே வா வா
ஆசை முத்தம் தா தா
இலையில் சோறு போடு
ஈயை தூர ஓட்டு
உன்னைப் போன்ற நல்லவர்
ஊரில் யாரோ உள்ளவர்
என்னால் உனக்குத் தொல்லை
ஏதும் இனி இல்லை
ஐயம் இன்றி சொல்வேன்
ஒற்றுமை என்றும் பலமாம்
ஓதும் செயலே நலமாம்
ஒளவை சொன்ன மொழியாம்
அ·தே எனக்கு வழியாம்

**ஒன்றும் ஒன்றும்**

ஒன்றும் ஒன்றும் இரண்டு
பூவில் இருப்பது வண்டு
இரண்டும் இரண்டும் நான்கு
இனிப்பாய் இருக்கும் தேங்காய்
மூன்றும் மூன்றும் ஆறு
வேலை செய்தால் சோறு
நான்கும் நான்கும் எட்டு
நன்றாயப் பாடுவாள் பட்டு
ஐந்தும் ஐந்தும் பத்து
அன்பே நமது சொத்து

https://jtmtamilschool.org/

# செய்திகள்

- நமது பள்ளி ஆண்டு விழா மிக சிறப்பாக மார்ச் மாதத்தில் நடந்த பள்ளி நிர்வாகம் ஏற்பாடு செய்து கொண்டு இருக்கிறது.
- உங்கள் குழந்தைகள் தமிழ் மற்றும் அதன் கலாச்சாரம் தொடர்பான நிகழ்ச்சிகளில் பங்கேற்க விரும்பினால் தயவுசெய்து பள்ளி அல்லது உங்கள் ஆசிரியரை அணுகவும்.
- Fetna தமிழ் தேனீ போட்டிகள் தொடங்க உள்ளது. நமது பள்ளியிலிருந்து மாணவர்கள் கலந்து கொள்ள தயாராகிவருகின்றன.
- குழந்தைகளுக்கு தமிழில் கதை எழுத ஒரு வளைதளம் - "தமிழ் எழுத படி". குழந்தைகள் எளிய முறையில் இதில் எழுதலாம். ( Tamilezhuthapadi.org.)

எதிர்வரும் நிகழ்வுகள்;

- இரண்டாவது மூன்றுமாத தேர்வு - 2/11
- பள்ளி ஆண்டு விழா - 3/25
- தமிழ் அரங்கம் - ஏப்ரல் 2023
- 2023-24 பள்ளி ஆண்டுக்கான பதிவு 4/14 அன்று திறக்கப்படும்

- தன்னார்வலர்கள் தமிழ் பள்ளிக்கு வரவேற்கப் படுகிறார்கள்.
- நமது தமிழ் பள்ளி இணையதளம்; https://jtmtamilschool.org/